**அம்பலங்கொட நகர சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பலங்கொட நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அம்பலங்கொட நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 12,828,340 இற்கான பெறுமதி மற்றும் பண்டக் கணிப்பீட்டின் மூலம் இனங்காண்பபட்ட களஞ்சியப் பேரேட்டில் பதிவு செய்யப்படாத 04 விடயங்கள் தொடர்பான 38 இருப்பு அலகுகளின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றின் படி இறுதி தேறிய சொத்துக்களில் பெறுமதி ரூபா 182,632,104 தொகையாகக் காணப்பட்டதுடன், தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றின் படி ரூபா 181,312,401 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 1,319,703 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அந்த குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்த பெறுமதி ரூபா 67,180 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அந்தக் குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 08 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 4,475,193 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் காணப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 83,277,670 தொகைக்கான 16 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | எதிர் காலத்தில் உரிய அட்டவணைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் மற்றும் சரியான அட்டவணைகள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபைக் கட்டளைச் சட்டப் பிரிவு 170(2) | வரித் தொகையை அறவீடு செய்வதற்கு சபைக்கு ஆதனங்களை தடைசெய்யும் உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொடுப்பனவு போதியளவானதாக காணப்படாமையால் உத்தியோகத்தர் ஒருவரை சேர்ப்பது கடினமாக உள்ளது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | சபையினால் 2017 ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் பெற்றிருந்த ரூபா 290,564 இற்கான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முற்பண மீதிகள் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருக்கின்றது என மற்றும் கணக்குப் பதிவு வழுவொன்று காணப்படுகின்றது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2016 நவம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | 2014 ஆண்டு முதல் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த 02 வாகனங்கள் மற்றும் ஹாடிமெக் இயந்திரமொன்று அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அப்புறப்படுத்தல் அலுவல்கள் பூர்த்தி செய்யப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க விரைவாக அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2010 திசெம்பர் 27 திகதிய தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இலக்கம் 2010/01 இன் பிரிவு 05 | அனைத்துக் கடையறைகளுக்காக உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் அதற்கு முரணாக 46 கடையறைகளுக்காக 10 வருடங்களுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தற்போது கடையறை வாடகை உடன்படிக்கைகள் அனைத்தும் ஒவ்வொரு 03 வருடங்கள் 03 வருடங்களில் நாளதுவரை ஆக்கப்படுகின்றது. | சுற்றறிக்கைக்கு இணங்க உடன்படிக்கை புதுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது செயலாளரினால் ஒரு நாளைக்கு வீட்டுக்கு மற்றும் அலுவலகத்திற்கும் இடையே செய்தல் 04 தடவைகள் பிரயாணம் செய்தமைக்காக செயலாளரினால் தொகுதிப் போக்குவரத்து வசதிகள் இன்றி, சபையின் வாகனத்தை பயன்படுத்தியிருந்ததுடன், எரிபொருளுக்காக ரூபா 973,464 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தலைவருக்கு காணப்படும் அனைத்து அதிகாரங்களும் செயலாளருக்கு இருக்க வேண்டும் என. | கிரயம் குறைவாக இருக்கக் கூடியவாறு வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 23,564,792 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19,158,420 தொகை ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 27,775,000 | 23,412,643 | 25,597,905 | 33,037,261 | 24,050,000 | 23,950,355 | 24,696,404 | 35,222,523 |
| வாடகை | 26,338,750 | 19,879,535 | 18,712,568 | 13,120,697 | 23,601,250 | 17,835,503 | 18,140,843 | 11,953,730 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 603,000 | 535,693 | 723,703 | 37,899 | 604,000 | 375,494 | 431,844 | 225,909 |
| ஏனைய வரு மானங்கள் | 30,089,000 | 19,946,983 | 21,018,308 | 2,312,782 | 22,995,000 | 21,229,464 | 20,205,294 | 3,384,107 |
| மொத்தம் | 84,805,750 | 63,774,854 | 66,052,484 | 48,508,639 | 71,250,250 | 63,390,816 | 63,474,385 | 50,786,269 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மற்றும் வாடகை வருமானம் மீதி முறையே ரூபா 35,222,523 தொகை மற்றும் ரூபா 11,953,730 தொகையாகக் காணப்பட்டதுடன், இறுதியில் உள்ளவாறு அது ரூபா 33,037,261 தொகை மற்றும் ரூபா 13,120,697 தொகை ஆகும். | நிலுவை வாடகை மீதிகளை பதிவழிப்பதற்காக பரிந்துரை பெற்றுக் கொள்வதற்கு தொடர்நடவடிக்கைகாக அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்ட பழைய வர்த்தக கட்டிடத் தொகுதியின் 58 கடையறைகள் தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை. | விரைவாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2023 ஆண்டளவில் உடன்படிக்கைகள் காலவதியாகி இருந்து 51 கடையறைகள் காணப்பட்டதுடன், அந்த உடன்படிக்கைளை நாளதுவரை ஆக்குவதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 79 கடையறைகள் தொடர்பாக உடன்படிக்கையின் காலப் பகுதி குறிப்பிடப்படாமல் கடையறைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | வாடகை உடன்படிக்கை புதுப்படுத்துவதற்காக வாடகையாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் மற்றும் தற்போதைய வாடகை உடன்படிக்கைகள் ஒவ்வொரு 03 வருடங்களில் 03 வருடங்களில் நாளதுவரை ஆக்கப்பட வேண்டுமென உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டது என. | சுற்றறிக்கைக்கு இணங்க உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான கடையறைகள் 2007 மற்றும் 2015 ஆண்டுகளின் பின்னர் முறையே 55 மற்றும் 51 தொகை பெறுமதி மதிப்பீடு செய்து வாடகை அறவிட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | சுற்றறிக்கைக்கு இணங்க பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 55,104 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 39,229,742 தொகை காணப்பட்டது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 டிரக்டர்கள், ஒரு டிபர் வண்டி மற்றும் கைடிரக்டர் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக சபைக்கு சொந்தமான வாகனத் திருத்தவேலை செயற்களத்திற்கு அனுப்பப்பட்டு 08 வருடங்களும் 04 மாத காலவீச்சொன்று கடந்திருந்த போதிலும் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சிதைவடைந்த நிலைமையில் காணப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக பொறியியலாளர் அறிக்கைகள் கிடைத்தவுடன் தொடர்நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் குறிப்பிட்ட காலப் பகுதியில் திருத்த வேலை மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 18 ஆம் இலக்க நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 159(1) ஏற்பாடுகளுக்கு இணங்காமல் 2020 ஆண்டில் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 786,979 இற்கான முத்திரைக் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக சபையின் செயலாளர் உட்பட 05 உத்தியோகத்தருக்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவு என சபை நிதியத்திலிருந்து ரூபா 23,609 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சபைத் தீர்மானத்தின் படி கிடைத்த தொகையில் 3 சதவீத பணக் கொடுப்பனவொன்று உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டது என. | சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இணங்காத கொடுப்பனவுகளை மீளஅறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபைக்குச் சொந்தமான வாடிவீட்டு வளவினை அபிவிருத்தி செய்து பேணிச் செல்வதற்காக 2013.11.09 முதல் 50 வருட காலப் பகுதிக்காக தனியார் கம்பனி ஒன்றுடன் குத்தகை உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருந்த போதிலும் குத்தகைக்கு கொடுத்து 10 வருட காலப்பகுதி கடந்திருந்த போதிலும் இந்த வளவில் எதுவித அபிவிருத்தி அலுவல்களும் மேற்கொள்ளப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | தலைமை அலுவலகத்தின் சட்ட உத்தியோகத்தர்களிடம் ஆலோசனை வேண்டப்பட்டுள்ளது என. | வாடவீட்டு வளாகத்தின் அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| படபெதிமுள்ள தகனகூடத்திற்கு அண்மையில் மதகு நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக உரிய ரேட்கள் பயன்படுத்தாத காரணத்தினால் ரூபா 157,148 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | விலைப் பகுப்பாய்வு மற்றும் வேலை விபரங்களின் முழுமையான விவரக் குறிப்புக்கள் தொடர்பான விபரங்கள் சபைக்கு வழங்கி இருக்கவில்லை என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையில் சேவையாற்றிய, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள, 63 நிரந்தரமல்லாத ஊழியர்களிடம் அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 487,043 இற்கான கடன்மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை கடன்மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை ஊழியர் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |